## சுருக்கம்

கூட்டுறவுத் துறை– மதுரை மாவட்டம் – பேரையூர், திருமங்கலம், கடலூர் மாவட்டம்– சிதம்பரம், ஈரோடு மாவட்டம்– பெருந்துறை மற்றும் நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் முறையே, ரூ.15 இலட்சம், ரூ.6 இலட்சம், ரூ.15 இலட்சம், ரூ.20 இலட்சம் மற்றும் ரூ.35.35 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 91.35 இலட்சம் மதிப்பீட்டில், துவரை, உளுந்து மற்றும் பாசிப்பயறு உடைக்கும் இயந்திரம், மிளகாய் அரவை இயந்திரம் மற்றும் எண்ணெய் பிழியும் இயந்திரம் ஆகிய பதனிடும் அலகுகள் அமைத்தல்– கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.91.35 இலட்சம் வட்டியில்லா கடனாக வழங்க அனுமதி – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிம்2) த்துறை

அரசு ஆணை (டி) எண்.200

நாள்: 09.09.2014
ஜய வருடம், ஆவணி 24,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. அரசின் கடிதம் எண்.17342/சிஎம்2/2014–1, நாள்: 30.7.2014.
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடித எண்.72149/2014, இப2, நாள்: 27.8.2014.

---

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2014–2015– ஆம் ஆண்டிற்கான, கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், “வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்கள் வேளாண் விளைபொருட்களை பதப்படுத்தி, மதிப்பினைக் கூட்டி விற்பனை செய்து அதிக இலாபம் பெற பேரையூர், சிதம்பரம், திருமங்கலம், பெருந்துறை, திருச்செங்கோடு ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில், துவரை, உளுந்து மற்றும் பாசிப்பயறு உடைக்கும் இயந்திரம், மிளகாய் அரவை இயந்திரம், எண்ணெய் பிழியும் இயந்திரம் ஆகிய பதனிடும் அலகுகள் ரூ.91 இலட்சம் செலவில் அமைக்கப்படுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்” என அறிவித்துள்ளார்கள்.

2. மேலே, இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், 2014–2015– ஆம் ஆண்டிற்கான, கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், “வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்கள் வேளாண் விளைபொருட்களை பதப்படுத்தி, மதிப்பினைக் கூட்டி விற்பனை செய்து அதிக இலாபம் பெற பேரையூர், சிதம்பரம், திருமங்கலம், பெருந்துறை, திருச்செங்கோடு ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில், துவரை, உளுந்து மற்றும்

பாசிப்பயறு உடைக்கும் இயந்திரம், மிளகாய் அரவை இயந்திரம், எண்ணெய் பிழியும் இயந்திரம் ஆகிய பதனிடும் அலகுகள் ரூ.91 இலட்சம் செலவில் அமைக்கப்படுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்" என அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக, மதுரை மாவட்டம் – பேரையூர், திருமங்கலம், கடலூர் மாவட்டம்–சிதம்பரம், ஈரோடு மாவட்டம்–பெருந்துறை மற்றும் நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் முறையே, ரூ.15 இலட்சம், ரூ.6 இலட்சம், ரூ.15 இலட்சம், ரூ.20 இலட்சம் மற்றும் ரூ.35.35 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 91.35 இலட்சம் மதிப்பீட்டில், துவரை, உளுந்து மற்றும் பாசிப்பயறு உடைக்கும் இயந்திரம், மிளகாய் அரவை இயந்திரம் மற்றும் எண்ணெய் பிழியும் இயந்திரம் ஆகிய பதனிடும் அலகுகள் அமைக்க, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.91.35 இலட்சம் வட்டியில்லா கடனாக வழங்க அனுமதி அளிக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசைக் கோரியுள்ளார்.

3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், துவரை, உளுந்து மற்றும் பாசிப்பயறு உடைக்கும் இயந்திரம், மிளகாய் அரவை இயந்திரம் மற்றும் எண்ணெய் பிழியும் இயந்திரம் ஆகிய பதனிடும் அலகுகள் அமைக்க, மதுரை மாவட்டம் – பேரையூர், திருமங்கலம், கடலூர் மாவட்டம்– சிதம்பரம், ஈரோடு மாவட்டம்– பெருந்துறை மற்றும் நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு, முறையே, ரூ.15 இலட்சம், ரூ.6 இலட்சம், ரூ.15 இலட்சம், ரூ.20 இலட்சம் மற்றும் ரூ.35.35 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 91.35 இலட்சம், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து வட்டியில்லா கடனாக வழங்க, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அனுமதி அளிக்கலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எம்.பி. நிர்மலா**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–600 010.
**நகல்:–**
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னை–600 010.
கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர், மதுரை மாவட்டம்
கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர், கடலூர் மாவட்டம்
கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர், ஈரோடு மாவட்டம்
கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர், நாமக்கல் மாவட்டம்.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஜி)த் துறை, சென்னை–600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2/3/14

பிரிவு அலுவலர்